## <u>கம்பம் நகராட்சி</u>

**2019–ஆம் ஆண்டு ஜுன் மாதம் (28.06.2019) ஆம் நாள் வெள்ளி கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## <u>கூட்டப் பொருட்கள்</u>

| | |
|---|---|
| **1.** | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு) அவர்களின் 6/2019–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | இந்நகராட்சிக்கு சொந்தமான கம்பம்–குமுளி சாலையில் அமைந்துள்ள புதிய குப்பை கிடங்கில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதாலும், எவ்வித தீ தடுப்பு பாதுகாப்பு வசதியும் இன்றி அடிக்கடி தீவிபத்துக்கள் நேர்ந்து சுற்றியுள்ள பகுதியில் உள்ளவர்களுக்கும் தீயணைக்கும் பணியில் ஈடுபடும் தீயணைப்பு வீரர்களுக்கு ஆபத்தினை விளைவிக்கிறது என்பதால் குப்பை கிடங்கு தீ விபத்து தொடர்பாக தீத்தடுப்பு சாதனங்கள் நிறுவக்கோரி மாவட்ட அலுவலர், தீயணைப்பு – மீட்பு பணித்துறை, தேனி அவர்களின் கடிதம் ந.க.எண். **2358**/இ/**2019**, நாள். **23.05.2019** கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, குப்பை கிடங்கில் தீ விபத்து ஏற்படாமல் தடுக்கவும், அவ்வாறு தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக தீ அணைக்கும் விதத்தில் செயல்பட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தியதன்படி , உரக்கிடங்கில் தண்ணீர் தொட்டி, தீயணைப்பு ஹோஸ் மற்றும் தீயணைப்பு கருவிகள் போன்றவை அமைத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ. **9.00** இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம். |
| **3.** | இந்நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதால் தீ விபத்து தொடர்பாக தீத்தடுப்பு சாதனங்கள் நிறுவக்கோரி மாவட்ட அலுவலர், தீயணைப்பு – மீட்பு பணித்துறை, தேனி அவர்களின் கடிதம் ந.க.எண். **2358**/இ/**2019**, நாள். **23.05.2019** கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி ஆங்கூர்பாளையம் பழைய குப்பை கிடங்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நுண்உர செயலாக்க மையத்தில் (MCC) உரம் உலர்வைக்க ஷீட் மற்றும் தீயணைப்பு ஹோஸ் மற்றும் தீயணைப்பு கருவிகள் போன்றவை அமைத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ. **9.00** இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம். |
| **4.** | இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். T.N.60 V **2194** வாகனத்தின் டையனமோ சரிவர செயல்படாமல் வாகனத்தினை இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, புதியதாக டைனமோ, முன்பக்க பிரேக் லைனர், ஏர் பில்டர் போன்ற பொருட்கள் பொருத்தி பராமரிப்பு பணிகள் செய்திட உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி ஈப்பு எண். T.N.60 V 2194–க்கு புதியதாக டைனமோ, முன்பக்க பிரேக் லைனர், ஏர் பில்டர் போன்ற பொருட்கள் பொருத்துதல் | 1)உரிமையாளர், பரமசிவம் ஆட்டோ கேரேஜ், வ.உ.சி. திடல், கம்பம் | ரூ. 7,500/– |
| | | 3)ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ், சிஎம்எஸ் நகர், கம்பம். | ரூ. 7,470/– |
| | | 3)ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிகல், நகராட்சி எதிர்புறம், கம்பம் | ரூ. 7,020/– |

**அலுவலகக்குறிப்பு..** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிகல், கம்பம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**5.** கம்பம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் திடக்கழிவுகளை வாரம் ஒரு முறை ஜேசிபி இயந்திரம் மூலம் ஒதுக்கி சமப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு, 07.06.2019 அன்று விலைப்புள்ளிகள் கோரியதற்கு கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் – ரூ. ஜேசிபி ஒரு மணி நேரத்திற்கு |
|---|---|---|
| 1. | VSKM FRIENDS<br>Earth Movers<br>N.S.K. Petrol Pulk Near<br>Kumily Main Road, Gudalur | 850/– |
| 2. | M.P. Earth Movers<br>Erasakkanayakanoor | 800/– |
| 3. | KANNAN EARTH MOVERS<br>w1, Nayakkar Street, C. Pudupatti | 750/– |

அலுவலகக்குறிப்பு.. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் KANNAN EARTH MOVERS , C. Pudupatti கொடுத்துள்ள குறைந்தபட்ச விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 1626/2019/எச்1)

**6.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் காலம் முடிவடைவதால் 2019–2020 ஆம் ஆண்டிற்கு இன்சூரன்ஸ் கட்டண தொகை செலுத்தக்கோரி வரலான ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனியின் கடிதத்தின்படி ரூ. 2,09,554/–ஐ செலுத்த மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | TN.60T4504 | ரூ. 29,845/– |
| 2 | TN.60T4507 | ரூ. 29,508/– |
| 3 | TN.60T4524 | ரூ.30,014/– |
| 4 | TN.60Z.3591 | ரூ. 27,908/– |
| 5 | TN.60 Y 1959 | ரூ. 17,151/– |
| 6 | TN.60 X 0500 | ரூ. 37,387/– |
| 7 | TN.60W 0778 | ரூ. 37,741 |
| | | ரூ. 2,09,554/– |

அலுவலகக்குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்துவதை மன்றம் அனுமதிக்கலாம்.

**7.** நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். 48800/2006/எல் நாள். 20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service ) கீழ் <u>முதல்நிலை நகராட்சிகளுக்கு</u> ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதுநிலை கணக்கர் | Senior Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இளநிலை உதவியாளர் பணியிடங்கள் இரண்டு

**<u>அலுவலக குறிப்பு..</u>** மன்றம் அனுமதி வழங்கலாம் ( ந.க.எண்.1590 /சி1/ 2017 )

| 8. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தொழில் சார்ந்த வல்லுநர்களாக பதிவு செய்வதற்கு இணையதளத்தின் வழியாக (Online Registration) அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04.02.2019–இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி, பதிவு செய்யக்கோரும் தொழிற் சார்ந்த வல்லுநர்களுக்கான தகுதி சான்றிதழ், அனுபவச்சான்று, பட்டயம் மற்றும் பட்டப்படிப்பிற்கான சான்றுகள் மற்றும் பதிவு கட்டணம் செலுத்தப்பட்டதற்கான இரசீதுகளுடன் வரப்பெற்ற விண்ணப்பங்கள் ஸ்கிரினிங் கமிட்டியால் ஆய்வு செய்யப்பட்டு கீழ்கண்ட விண்ணப்பதாரர்களுக்கு 5 ஆண்டு காலத்திற்கு தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான பதிவு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |
|---|---|

| வ. எண். | பெயர் | கல்வி தகுதி | அனுபவச்சான்று | பதிவுக்கட்டணம் | வைப்புத்தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | கே. காமேஸ்வரன் | B.E., | 17 வருடம் | ரூ. 5000/–<br>122/CP/19-20<br>/0000237<br>Dt. 16.05.2019 | ரூ. 8000/–<br>வ.வ.எண்.22955<br>ஆக்ஸிஸ் வங்கி<br>கம்பம். |
| 2 | ஆர். ரவிசங்கர் | B.E., | 15 வருடம் | ரூ. 5000/–<br>122/CP/19-20<br>/0000246<br>Dt.17.05.2019 | ரூ.8000/–நகராட்சி<br>கருவூலம்,<br>செலான்<br>எண்.0001297 |
| 3 | அ.கார்த்திகேயன் | DCE., | 7 வருடம் | ரூ. 5000/–<br>122/CP/19-20<br>/0000197<br>Dt. 13.05.2019 | ரூ. 5000/–<br>வ.வ.எண்.333162<br>இந்தியன் வங்கி<br>கம்பம்.<br>ரூ.3000/–<br>நகராட்சி கருவூலம்,<br>செலான்<br>எண்.0001406 |
| 4 | எஸ்.ராமகிருஷ்ணன் | B.Tech | 32 வருடம் | ரூ. 5000/–<br>122/CP/19-20<br>/0000120<br>Dt. 07.05.2019 | ரூ. 5000/–<br>வ.வ.எண்.022953<br>ஆக்ஸிஸ் வங்கி<br>கம்பம்.<br>ரூ.3000/–<br>வ.வ.எண்.022980<br>ஆக்ஸிஸ் வங்கி |
| 5 | எம். பிரகாஷ்குமார் | DCE., | 32 வருடம் | ரூ. 5000/–<br>122/CP/19-20<br>/0000193<br>Dt. 13.05.2019 | ரூ. 5000/–<br>வ.வ.எண்.346489<br>KVB வங்கி<br>கம்பம்.<br>ரூ.3000/–<br>நகராட்சி கருவூலம்,<br>செலான்<br>எண்.0001302 |
| 6 | துரையரசு | B.E., | 29 வருடம் | ரூ. 5000/–<br>122/CP/19-20<br>/0000248<br>Dt. 17.05.2019 | ரூ. 5000/–<br>வ.வ.எண்.081165<br>கனரா வங்கி<br>கம்பம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | கே. சசிக்குமார் | DCE., B.E., | 23 வருடம் | ரூ. 5000/– 122/CP/19-20 /0000276 Dt. 27.05.2019 | |
| 8 | மணிவண்ணன் | DCE., | 16 வருடம் | ரூ. 5000/– 122/CP/19-20 /0000287 Dt. 30.05.2019 | ரூ.3000/– நகராட்சி கருவூலம், செலான் எண்.0001555 நாள்.03.06.2019 |
| 9 | மகேந்திரன் | B.E., | 7 வருடம் | ரூ. 5000/– 122/CP/19-20 /0000288 Dt. 30.05.2019 | ரூ.8000/– நகராட்சி கருவூலம், செலான் எண்.0001463 நாள்.30.05.2019 |
| 10 | ஆர்.மதன்குமார் | B.E., | 9 வருடம் | ரூ. 5000/– 122/CP/19-20 /0000296 Dt. 03.06.2019 | ரூ.8000/– நகராட்சி கருவூலம், செலான் எண்.0001573 நாள்.04.06.2019 |
| 11 | ராஜா | DCE., | 32 வருடம் | ரூ. 5000/– வ.வ.எண். 771005 Dt. 03.06.2019 LVB | |

அலுவலகக்குறிப்பு: ஸ்கிரின்ங் கமிட்டியின் பரிந்துரையினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 800/2019/எப்1)

**9.** மாவட்ட ஆட்சியர், தேனி அவர்களின் 10.06.2019–ஆம் தேதிய கலந்தாய்வுக்கூட்டத்தில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அவ்வப்பொழுது கண்டறிந்து அகற்ற அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு தற்போது மாதாந்திர செயல் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஜே.சி.பி இயந்திரம், டிராக்டர்கள் பயன்படுத்துவதற்கு (2019–2020)–ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ. 2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1522/2017/எப்1)

**ஒப்பம்/– திருமதி. இ. செல்வராணி,**
**ஆணையாளர்(பொ) மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 28.06. 2019**
**இடம். கம்பம்**